

# இனியா

## பிஞ்சுப் பாடல்கள்

யானைத் தாத்தா

ஈழத்துத் தேவன் பூதனார்

கலா லயம் பதிப்பகம்



# நல்ல முயலார்




கோக்கோ கோக்கோ
எங்கள் முயலார் நல்ல முயலார்
செல்ல முயலார்
மூஞ்சையை பார்க்கிறேன்
முன்னுக்குப் பாய்கிறார்
முகத்தாலே முட்டுறார்
- கோக்கோ கோக்கோ

கண்டபடி திரியிறார்
கால்படும் கவனம்
சாம்பல் வெள்ளை
கலந்த தொரு கலவை
தானாய்ப் பாய்ஞ்சு ஓடுறார்
தத்தித் தத்திப் பாயுறார்
- கோக்கோ கோக்கோ

வீட்டுக்குள்ள திரியிறார்
விறாந்தையெல்லாம் சுத்துறார்
விளையாட விரும்புறார்
வேகமாக ஓடுறார்
எங்கள் வீட்டு முயலார்
தங்கமான முயலார்
- கோக்கோ கோக்கோ

தன்ரை வேலை செய்வார்
தன்ரை சுத்தம் பார்ப்பார்
மொத்தமான முயலார்
சத்த மொண்டும் செய்யார்.
- கோக்கோ கோக்கோ





# அப்பப்பா இது தப்பப்பா






பேரன் :

அப்பப்பா இது தப்பப்பா
கண்டால் ஆசை வருமப்பா
உண்டால் நோயோ கூடுமப்பா.
-அப்பப்பா
குசினிப் பக்கம் பார்க்காதேங்கோ
இனிப்புப் பண்டம் தேடாதேங்கோ
தவிச்சுத் தவிச்சு தடவாதேங்கோ
அம்மா வாறார் அப்பா வாறர்
அங்காலை போங்கோ அங்காலை போங்கோ.
- அப்பப்பா

தாத்தா :

தம்பி பேரா பார்த்துச் சொல்லு
சும்மா என்னை வெருட்டாதை
கொம்மா கொப்பர் வந்தாச் சொல்லு
கொழுவல் வேண்டாம் கெதியாய்ச் சொல்லு.

ஐஸ்கிறீம் எண்டால் ஆசை ஆசை
வானும் வருகுது ஓடிபோ ஓடிப்போ
காசு இந்தா கொண்டுபோ கொண்டுபோ
வேண்டு இரண்டு ஆளுக்கு ஒண்டாய்.
- அப்பப்பா



பேரன் :

ஆசை ஆசை அப்பப்பா அம்மா கண்டால்
பூசை பூசை அப்பப்பா
டொக்டர் மாமா சொன்னது தெரியும்
கள்ள வேலை வேண்டாம் வேண்டாம்
வாழவேணும் நாங்கள் ஒண்டாய்.
- அப்பப்பா



# எறும்புத் தம்பி



எறும்புத்தம்பி எறும்புத்தம்பி எங்கே போகிறாய்
அவசரமாய் ஓடிநீயும் எங்கே போகிறாய்
ஊர்வலமாய் ஊர்ந்துநீயும் எங்கே போகிறாய்
எல்லோருமாய் சேர்ந்துநீயும் எங்கே போகிறாய்!
- எறும்புத் தம்பி


கல்யாண ஊர்வலமோ கனபேர் போகிறீர்
நில்லாமல் ஊர்ந்து ஊர்ந்து எங்கே போகிறீர்
மாப்பிளை பொம்பிளையை காண வில்லையே
என்ன ஊர்வலம் இது என்ன ஊர்வலம்
- எறும்புத் தம்பி

எறும்பார்:

உழைத்து வாழ்கிறோம் நாம்
ஒன்றாய் வாழ்கிறோம்
உழைத்து வாழ்கிறோம் மனிதா
உழைத்து வாழ்கிறோம்
ஒன்றாய் வாழ்கிறோம் நாம்
ஒன்றாய் வாழ்கிறோம்

மழை கால உணவைச் சேர்த்து
சேமித்து வைக்கிறோம் - மனிதா
சேமித்து வைக்கிறோம்
காலநிலை மாற்றம் கணித்து
வாழத் துணிகிறோம் - மனிதா
வாழத் துணிகிறோம்.
- எறும்புத் தம்பி

கவலையில்லை வெட்கமில்லை
பயமுமில்லையே
மனிதா எங்களோடு சேர்ந்து நீயும்
வாழப் பழகுவாய் - மகிழ்வாய்
வாழப் பழகுவாய்.
- எறும்புத் தம்பி






# ஆசை

பார்க்கப் பார்க்க ஆசை
அள்ளித் தின்ன ஆசை
வாசனை வருது வாசனை வருது
வாவா வெண்டு கெஞ்சிக் கேக்கிது
- பார்க்கப்



சாப்பிடச் சாப்பிட ஆசை
சாதம் பருப்புத் தோசை
இனிப்பு உறைப்பு கசப்பு
புளிப்பு உவர்ப்பு துவர்ப்பு
ஆஹா ஆஹா அறுசுவை
அள்ளி அள்ளித் தின்ன
ஆசை ஆசை ஆசை.
- பார்க்கப்

அப்பம் தின்ன ஆசை
கஞ்சி குடிக்க ஆசை
கூழ் குடிக்க ஆசை
கூடி ஒன்றாய்க் குடிப்போம்.
பள்ளித் தோழர் பலரும்
பகிர்ந்து தின்ன ஆசை
- பார்க்கப்



பாலர் நாங்கள் கூடி
விளையாட ஆசை
ஒளிச்சுப் பிடிக்க ஆசை
சைக்கிள் ஓட ஆசை
கூடி விளையாடி
கொண்டாடி மகிழ்வோம்
- பார்க்கப்

நிலவைப் பிடிக்க ஆசை
பறந்து போக ஆசை
சூரியன் கண்டு கதைக்க
பாலர் எமக்கு ஆசை
- பார்க்கப்



# இனியா

இனியா இனியா நீ வருவாய்
இன்பந் தரவே நீ வருவாய்
கொஞ்சிப் பேச நீ வருவாய்
பொன்மணிப் பூவே நீ வருவாய்

- இனியா

தேன் மொழியே நீ வருவாய்
கனி மொழியே நீ தருவாய்
தமிழ் மொழியே நீ வருவாய்
தரணி யாள வலம் வருவாய்

- இனியா

அன்பே தருவாய்
ஆசையாய் வருவாய்
இசையாய் ஒலிப்பாய்
மழையாய்ப் பொழிவாய்

- இனியா

அக்கா வருவாள்
அள்ளி அணைப்பாள்
சாதனா வருவாள்
சிரிக்கச் செய்வாள்.

- இனியா

கீரன் வருவான் விளையாட
கூடிவருவான் ஜெயனோடு
ஆளும் பேரும் ஒன்றாய்
ஆடி மகிழ்வாய் நன்றாய்.

- இனியா









# தாலாட்டு



முத்து பவளம் இரத்தினம்
முழுவதுமே உன் முகம்
பத்தரை மாற்றுத் தங்கமே
நித்திரை கொள்வாய் முழு நிலவே
- முத்து

ஆராரோ ஆராரோ
ஆரிவரோ ஆராரோ
-ஆராரோ

சிரிப் பழகிச் சிங்காரி
புன்னகை பூத்த மலர்
நான் நன்றாய் மகிழவோ
நீ பிறந்தாய் என் மகளே
-ஆராரோ

வளர்வாய் நீ வளர்வாய்
வானுயர நீ வளர்வாய்
என்னுயிரே கண்ணுறங்கு
இன்பமே கண்ணுறங்கு
-ஆராரோ

எந்நாளும் கண்ணுறங்கு
என்னவளே கண்ணுறங்கு
கண்ணுறங்கு கண்ணுறங்கு
காலம் மாறும் கண்ணுறங்கு
-ஆராரோ

பொன் னுலகம் காண
பொன் மணியே நீ யுறங்கு
விடியும் வரை கண்ணுறங்கு
விழி மூடி நீ யுறங்கு.
-ஆராரோ

நாடு சிறப்பாகும்
வீடு அமைதியாகும்
நல்லபடி கண்ணுறங்கு
செல்லமே கண்ணுறங்கு.
-ஆராரோ





# வாழை மரமே



வாழை மரமே வாழை மரமே
பச்சை நிற வாழை மரமே
தோழை நிமிர்த்தி வளர்கின்றாய்
வாழைக் குலை தருகின்றாய்
- வாழைமரமே

மஞ்சள் மஞ்சள் மஞ்சள் பழம்
எல்லோரும் உண்ணும் பழம்
பல்லில்லாத் தாத்தாவும்
பசியைத் தீர்க்கத் தின்னும் பழம்
- வாழைமரமே

வாழை இலையில் விருந்து படைப்போம்
வயிறு நிறைய உண்டு மகிழ்வோம்
ஏழை என்று எவரும் இல்லை
எல்லோரும் ஒன்றாய் வாழ்வோம்
- வாழைமரமே

வாழைக் குட்டி போடுகின்றாய்
அதைக் கண்டு மகிழ்கின்றாய்
வாழையடி வாழையாக
வாழ்கவென்று வாழ்த்துவமே!
- வாழைமரமே





# பூக்கள்


பூக்கள் பூக்கள் பூக்கள்
வடிவான பூக்கள்
பார்க்கப் பார்க்க அழகு
மறைக்காதே விலகு
- பூக்கள்

சிவப்பு றோசாப் பூக்கள்
செவ்வந்திப் பூக்கள்
செவ்வரத்தம் பூக்கள்
செந்தாமரைப் பூக்கள்
- பூக்கள்

வெள்ளை நிறப் பூக்கள்
மல்லிகைப் பூக்கள்
வெண் தாமரைப் பூக்கள்
வேறு என்ன வேண்டும்
- பூக்கள்

சூரிய காந்திப் பூக்கள்
சூரியன் கண்டு சாயும்
நாலு மணிப் பூக்கள்
நேரம் காட்டி மகிழும்
- பூக்கள்

தேனீ சுற்றித் திரிவார்
பூவும் கண்ணைச் சிமிட்ட
பூவில் வந்து அமர்வார்
புளுகத்தோடு பறப்பார்
- பூக்கள்









# பனை மரம்








பனை மரம் பனை மரம்
உயரமான பனை மரம்
முகிலை முட்டும் பனை மரம்
மேகம் தட்டும் பனை மரம்
- பனை மரம்

எங்கள் ஊர்ப் பனை மரம்
கறுப்பு நிறப் பனை மரம்
நூறு ஆண்டு வாழும் மரம்
நிமிர்ந்து நிற்கும் பனை மரம்
- பனை மரம்

நொங்கு வெட்டிக் குடிப்போம்
உறிஞ்சி உறிஞ்சிக் குடிப்போம்
சுண்டுவிரல் விட்டுத்
தோண்டித் தோண்டிக் குடிப்போம்.
- பனை மரம்

குண்டு குண்டு குண்டுப் பழம்
கறுப்பு சிவப்பு மஞ்சள் பழம்
சூப்பிச் சூப்பித் தின்னும் பழம்
சப்பிச் சப்பிச் சாப்பிடுவோம்
- பனை மரம்

பனஞ் சார்வு எடுப்போம்
பாய் கடகம் பின்னுவோம்
பனம் பாத்தி போடுவோம்
பனங் கிழங்கு இழுப்போம்
- பனை மரம்



பனம் பழத்தைப் பிசைந்து பிசைந்து
பனங் களியைப் பாயில் போட்டு
செய்கிறோம் பனாட்டு
செய்கிறோம் பனாட்டு
- பனை மரம்




வெளியீடு : கலா லயம் பதிப்பகம் 17 , 23.09.2025

இல.68. நீதிமன்ற வீதி, மல்லாகம், இலங்கை

அச்சகம்; ஜே.எஸ். பிறிண்டேஸ், சில்லாலை வீதி.

பண்டத்தரிப்பு

விலை: ரூபா 600/=

Publication : Kala layam Publication 17 , 23.09.2025

N0 68, Court Road, Mallakam, Sri Lanka

Print : J.S. Printers, Sillalai Road, Pandatharippu

Prize : Rs. 600/=

ISBN no : 978-624-93177-7-2

9 786249 317772